## நீதித்துறையின் ஒப்புதலோடு கிருஷ்ணராய புரம் தொகுதி

# தரகம்பட்டியில் உரிமையியல் - குற்றவியல் நடுவர் நீதிமன்றம் துவக்க நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.ரகுபதி தகவல்!

சென்னை, ஏப்.27- சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளும் அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பதில்களும் வருமாறு:-

**எம்.ஆர்.காந்தி** :கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி துவக்க அரசு முன் வருமா?

**அமைச்சர் எஸ்.ரகுபதி**: இல்லை.

**எம்.ஆர். காந்தி**: கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு சட்டக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் மிகச் சிறிய, மக்கள் தொகை அதிகமுள்ள மாவட்டம். அங்கு ஏறத்தாழ 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள் என்று கருதுகிறேன். அது படித்தவர்கள் அதிகமுள்ள மாவட்டமாகக் கருதப்படுகிறது. அது தொழிற்சாலைகளோ, ஆலைகளோ இல்லாத மாவட்டம்; விவசாயத்தால் வாழ்கின்ற ஏழை மாவட்டம். ஒவ்வோராண்டும் ஏறத்தாழ 21 ஆயிரம் மாணவ, மாணவிகள் +2 படித்து வெளியே வருகிறார்கள். பலர் கல்லூரிகளில் படித்து வருகிறார்கள். அவ்வாறு படித்து வருகிறவர்கள், மருத்துவக் கல்லூரிகளில் படிக்கிறார்கள்; பொறியியல் கல்லூரிகளில் படிக்கிறார்கள்; வெளி மாவட்டங்களில் படிக்கிறார்கள்; நர்சிங் படிக்கிறார்கள்; ஐ.டி.ஐகளில் படிக்கிறார்கள்; பாலிடெக்னிக் கல்லூரிகளில் படிக்கிறார்கள். எனினும், அங்குள்ள ஏழை மாணவர்கள் சட்டம் பயில ஏதுவாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு சட்டக் கல்லூரியைத் துவக்க அரசு முன்வருமா என்பதை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

தனியார் கல்லூரிகளில் சட்டம் பயில அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, ஏழை மாவட்டத்து மாணாக்கர்களுக்காக அமைச்சர் அவர்கள் முழு முயற்சி எடுத்து, சட்டக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும் என்று அரசையும், அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ். ரகுபதி**: கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், வெளி மாவட்டங்களில் சட்டம் பயின்று, தற்போது உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகளாக இருக்கிறார்கள்; அங்கு இருக்கக்ககூடியவர்களில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம். அதிலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையிலும் பணிபுரிகின்ற இரண்டு பெண் நீதிபதிகள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இன்னும் சொல்லப் போனால், உச்ச நீதிமன்றத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் நீதிபதியாக இருக்கிறார். எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எங்கும் சென்று, எப்படியும் படித்து முன்னேறிவிடுவார்கள் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. அவர்கள் அந்தளவுக்கு திறமையானவர்கள். தற்போது, எந்த இடத்தைப் பார்த்தாலும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தான் படித்தவர்களாக, வேலைவாய்ப்பு வேண்டும் என்று கேட்டு, வேலை பெற்றவர்களாக இருக்கிறார்கள். கன்னியாகுமரிக்கு மாற்றல் கிடைப்பதுதான் இன்றைக்கு கஷ்டமான ஒன்றாக இருக்கிறது. அந்தளவிற்கு சிறந்த படிப்பாளிகள் உள்ள மாவட்டம் அந்த மாவட்டம். அங்குள்ளவர்கள் எப்படியும் படித்து தேறிவிடக்கூடியவர்கள். கன்னியாகுமரிக்கு பக்கத்திலேயே திருநெல்வேலியில் அரசு சட்டக் கல்லூரி இருக்கிறது. கன்னியாகுமரியில் ஒரு தனியார் சட்டக் கல்லூரி இருக்கிறது. அங்கு கட்டணம் அதிகமாக இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியை அம்மாணாக்கர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளில் பார்த்தால், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.

மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை முடிவாகும். நான் நிறைய தடவை கூறிவிட்டேன்; ஒரு சட்டக் கல்லூரி துவங்குவதற்கு அதிகமான நிதி தேவைப்படும் என்ற காரணத்தால் ஒரு மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி துவங்குவது என்பது கொள்கை அளவிலே இருக்கிறதே தவிர, நிதிநிலை அடிப்படையில் அதை நிறைவேற்ற இயலாத சூழ்நிலையில் இருக்கிறோம். நிதிநிலை சரியானவுடன், அனைத்து மாவட்டங்களிலும் நிச்சயமாக சட்டக் கல்லூரி துவங்க வேண்டும் என்பதுதான் முதலமைச்சர் அவர்களுடைய விருப்பமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**எம்.ஆர். காந்தி**: அமைச்சர் அவர்கள், எங்கு சென்றாலும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள்; உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகளாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் முழு முயற்சி எடுத்து படிக்கிறார்கள். ஆனாலும், அது மக்கள் மிக வறுமையில் வாழக்கூடிய மாவட்டம். அங்கு விவசாயத்தைத் தவிர வேறு தொழில் கிடையாது. அங்கு நிறைய படித்தவர்கள் இருந்தாலும், முதல் பட்டதாரிகளாக நிறைய பேர் வருகிறார்கள். எனவே, முதல் பட்டதாரிகளாக வருகிறவர்களுக்கு வாய்ப்பு தரும் வகையில், அங்கு சட்டக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். அதேசமயத்தில் அமைச்சர் அவர்கள் அவர்கள் கூறியதுபோன்று, தற்போது நிறைய மாணாக்கர்கள் பல்வேறுபட்ட கல்லூரிகளில் படித்து வருகிறார்கள். அவ்வாறு படித்து வரக்கூடிய இளைஞர்கள், இளையவர்கள், பட்டதாரிகள் தொழில் செய்ய வருகின்றபோது மிகவும் சிரமப் படுகிறார்கள். அவர்கள் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாக இருப்பதால், சக வழக்கறிஞர்களுடன் இணைந்து, நீதிமன்றங்களுக்குச் சென்று பணியாற்றி, நீதித் தொழிலில் நிலைத்து நிற்பதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) எனவே, இளைஞர்கள், பட்டதாரிகள், பட்டம் பெற்றவர்கள், அந்தத் தொழிலுக்கு வரக்கூடிய, நீதிமன்றத்திற்கு வரக்கூடிய இளம் வழக்கறிஞர்களுக்கு மூன்று ஆண்டுகள் மானியம் கொடுத்தால், அந்த இள வழக்கறிஞர்கள் மிகச் சிறப்பாக நல்ல வழக்கறிஞர்களாக உருவாகுவார்கள் என்பதால் இதைக் கேட்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**அமைச்சர் எஸ்.ரகுபதி**: தமிழ்நாடு அரசு, தற்போது அரசு சட்டக் கல்லூரிகளில் பயின்று வருகின்ற மாணாக்கர்களுக்கு உரிய உதவித் தொகையை முதல் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு அவர்கள் பல பெரிய வழக்கறிஞர்களுக்கு juniorsகளாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களும் அவர்களை நன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அத்துணை பேருக்கும் பணம் கொடுப்பது என்பது அரசாங்கத்தால் முடியாது. ஆண்டொன்றுக்கு 9,000 வழக்கறிஞர்கள் பதிவு செய்கிறார்கள். 9,000 பேருக்கும் பணம் கொடுக்க முடியாது. அதில் தகுதி படைத்தவர்களுக்கு அரசு நிதியுதவி செய்கின்றது என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்..

**க. சிவகாமசுந்தரி**: கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் தாலுகா பகுதியானது குளித்தலை நீதிமன்ற எல்லை வரையரைக்குட்பட்டு செயல்பட்டு வருகிறது. கடவூர் தாலுகாவில் எல்லை பகுதியான கோட்டைகரையிலிருந்து குளித்தலை சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மக்கள் நீண்ட தூரம் சென்று வர சிரமம் ஏற்படுவதால், கடவூர் தாலுகாவில் புதிய நீதிமன்றம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நீண்ட காலமாக கோரிக்கை வைத்து வருகின்றனர். பொது மக்களின் கோரிக்கையையேற்று தரகம்பட்டியில் புதிய நீதிமன்றம் அமைத்துத்தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

**எஸ். ரகுபதி**: உறுப்பினருடைய கோரிக்கை அரசினுடைய கவனத்தில் இருக்கின்றது. கடவூர் தாலுகா நீதிமன்றம் என்று முதலில் சொல்லிவிட்டார்கள். அதன்பிறகு தரகம்பட்டி என்று அந்த இடத்தை குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே தான் எல்லா அலுவலகங்களும் இருக்கிறது. இதனை உயர் நீதிமன்றத்திற்கும் தெரிவித்திருக்கிறோம். எனவே, மிக விரைவில் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அங்கே ஒரு உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் துவங்குவதற்கான நடவடிக்கைகள் நிதித் துறையினுடைய ஒப்புதலோடு மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மு. ஜெகன் மூர்த்தி**: சென்னை சட்டக் கல்லூரி என்பது வரலாற்று சிறப்புமிக்க ஒரு கல்லூரியாகும். உயர் நீதிமன்றமாக இருந்தாலும், உச்ச நீதிமன்றமாக இருந்தாலும் அந்தக் கல்லூரியில் படித்தவர்கள் இன்றைக்கு நீதிபதிகளாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட இந்தக் கல்லூரி. சென்னையிலிருந்து 80 கிலோ மீட்டர் ஒரு கிராமத்தில், திருவள்ளூர் மாவட்டத்தில், திருவள்ளூர் நகரத்தைத் தாண்டி, 20 கிலோ மீட்டருக்கு அப்பால், ஒரு சாதாரண கிராமத்தில், எந்தவித போக்குவரத்து வசதியும் இல்லாத கிராமத்தில் கல்லூரி நடைபெறுகிறது. மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்தக் கல்லூரியை சென்னைக்கு மாற்ற வேண்டும். இல்லையென்றாலும். குறைந்தது திருவள்ளூர் மாநகரத்திலாவது அந்தக் கல்லூரியை மாற்ற வேண்டும். ஏன் நீதிமன்றம் அருகில் கல்லூரியை வைக்கிறார்கள் என்று சொன்னால், மாணவர்கள் internship என்கின்ற முறையில் அந்தப் பயிற்சியை எடுப்பதற்கு வசதியாக இருக்கின்ற காரணத்தினால்தான், உலகம் முழுக்க இருக்கின்ற இந்த சட்டக் கல்லூரிகள் நீதிமன்றத்திற்கு அருகிலேயே இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது)

ஆகவே, அந்த சட்டக் கல்லூரியை சென்னை மாநகராட்சிக்கோ அல்லது திருவள்ளூர் town பகுதிக்கோ மாற்ற வேண்டுமென்றும், அந்தக் கல்லூரயை கேளம்பாக்கம் பகுதிக்கும், திருவள்ளூர் பகுதிக்கும் இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள்.

இந்த இரண்டையும் ஒன்றிணைத்து, திருவள்ளூரிலேயே உருவாக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் எஸ். ரகுபதி**: சென்னையில்தான் சட்டக் கல்லூரி இயங்கி வந்தது. அங்கே மாணவர்கள் நடத்திய போராட்டம் போன்றவற்றின் விளைவாக அன்றைக்கு ஒரு நபர் Commission நியமிக்கப்பட்டு, அந்த Commission அளித்த அறிக்கையின் அடிப்படையில்தான் சென்னையில் இருக்கக்கூடிய கல்லூரிகள், ஒன்று திருவள்ளூர் மாவட்டம், பட்டரைபெரும்புதூரிலும், மற்றொன்று செங்கல்பட்டு மாவட்டம், புதுப்பாக்கத்திலும் இரண்டு கல்லூரிகளாகப் பிரித்து அங்கே செயல்பட அனுமதிக்கப்பட்டன. எனவே, இது அரசாங்கம் எடுத்த முடிவல்ல. அன்றைக்கு மாணவர்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக, சட்டக் கல்லூரியை சென்னைக்கு வெளியே சென்று விட்டால் நன்றாக இருக்குமென்று ஒரு நபர் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில்தான் அது செயல்படுத்தப்பட்டதே தவிர, சென்னையில் இருக்கக்கூடிய சட்டக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்ற எண்ணம் அரசுக்குக் கிடையாது. எங்களைப் பொறுத்தவரையில், அந்த இடம் உயர்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அங்கே உயர் நீதிமன்றம், அது பழமை வாய்ந்த, புதுப்பிக்கத்தக்க கட்டடமாக 29 கோடி ரூபாயில் அதனை செயல்படுத்தி, அதில் 9 நீதிமன்ற வளாகங்கள் வரவிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். திருவள்ளூர் நீதிமன்றத்திற்கு அருகிலேயேதான் நம்முடைய பட்டரைபெரும்புதூர் சட்டக் கல்லூரி இருக்கின்றது. மாணவர்களின் போக்குவரத்திற்கு ஏற்றவாறுதான் இருக்கிறது. அவர்களுக்கான தேவையான வசதிகளை நிச்சயமாக அந்தக் கல்லூரி செய்து கொடுக்கும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி பதிலளித்தார்.

---

## சென்னையின் 4வது ரெயில் முனையம் கொளத்தூர் தொகுதியில் உள்ள

# பெரம்பூர் லோகோ - கேரேஜ் ஒர்க்ஸ் பகுதியில் பணிகள் தொடங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

## தெற்கு ரயில்வேயிடம் இரா.கிரிராஜன் எம்.பி. கேள்வி!

**சென்னை. ஏப்.27-**

**சென்னையின் நான்காவது ரயில் முனையம் கொளத்தூர் தொகுதியிலுள்ள பெரம்பூர் லோகோ / கேரேஜ் ஒர்க்ஸ் பகுதியில் பணிகள் தொடங்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என தெற்கு ரயில்வேயிடம் தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.**

தென்னக ரயில்வேயின் சென்னை கோட்டத்திற்கு உட்பட்ட எம்.பி.க்கள் உடனான ஆலோசனைக் கூட்டம் அண்டுதோறும் நடைபெற்று வருகின்றது. இந்த ஆண்டுக்கான கூட்டம் தெற்கு ரயில்வேயின் பொது மேலாளர் ஆர்.என். சிங் தலைமையில் நடைபெற்றது.

அந்த கூட்டத்தில் கலந்துகொண்ட தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன், புதிய வழித்தடங்கள், ரயில்களின் வழித்தடங்கள் நீட்டிப்பு, ரயில்வே துறையில் தமிழ் மொழி தெரிந்த ஊழியர்கள், ரயில்களில் தென்னிந்திய உணவுகள், ரயில்வே திட்டங்களின் தற்போதைய நிலை, ரயில் நிலையங்களின் உட்கட்டமைப்பு, வசதிகள் மேம்பாடு, ஊழியர்களின் நலன், பயணிகளின் வசதி, கூடுதல் நிறுத்தங்கள், புதிய வந்தே பாரத் ரயில்கள் போன்றவை குறித்த பல்வேறு கேள்விகள், திட்டங்களின் செயல்பாடுகள் ஆகியவை குறித்தும் பல கோரிக்கைளை முன்வைத்துள்ளார்.

அவை, சென்னைக்கு அதிக ரயில் சேவைகளை வழங்கும் வகையில் கொளத்தூர் தொகுதியிலுள்ள பெரம்பூர் லோகோ / கேரேஜ் ஒர்க்ஸ் பகுதியில் சென்னையின் நான்காவது ரயில் முனையத்தை அமைக்கும் பணிகளை தொடங்கி விரைவுபடுத்த வேண்டும் என்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா? எனவும்

சென்னை பெரம்பூரில் உள்ள ரயில்வே மருத்துவமனையின் கட்டுமானத்தை விரைவுபடுத்தவும், மருத்துவமனையை மேம்படுத்தவும் வேண்டும் எனவும், மோசமான நிலையில் உள்ள பெரம்பூர் லோகோ ஒர்க்ஸ் பயணிகள் கடக்கும் சுரங்க பாதை (32) பணியை துரிதப்படுத்த வேண்டும் எனவும், சென்னை மற்றும் ஷீரடி இடையே தினசரி விரைவு ரயிலை இயக்க வேண்டும் எனவும்,

### பணிகளை விரைவு படுத்த வேண்டும்!

தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டத்தில் உள்ள மாம்பலம், கிண்டி, பரங்கிமலை உள்ளிட்ட 15 ரயில் நிலையங்களின் மறுசீரமைப்பு பணிகளை விரைவுபடுத்த வேண்டும் எனவும்

செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் ரயில் நிலையத்தை அம்ரித் பாரத் ரயில் நிலைய மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் சேர்க்க வேண்டும்; அத்துடன் அனைத்து உள்ளூர் ரயில்கள் மற்றும் விரைவு ரயில்களும் அங்கு நின்று செல்லும்வகையில் ரயில் நிறுத்தத்தை (stoppage) உருவாக்க வேண்டும் எனவும்

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் நவீனமயமாக்கல் மற்றும் மேம்பாட்டு பணிகளின் தற்போதைய நிலை என்ன? அவை முடிவடைய எவ்வளவு காலம் ஆகும்? என வினவியும்

சைதாப்பேட்டை ரயில் நிலையத்தை அம்ரித் பாரத் ரயில் நிலைய மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் புனரமைக்கும் பணிகளை தொடங்க வேண்டும் என வும்

சென்னை எழும்பூர் முதல் கடற்கரை வரையிலான 4.3 கி.மீ. தூரமுடைய நான்காவது லைன் அமைக்கும் பணிக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி, வழங்கப்பட்ட நிதி, செலவிடப்பட்ட தொகை ஆகியவற்றை தெரிவிக்க வேண்டும். எனவும்

புதிய ரயில்களை அறிமுகப்படுத்தும் வகையில் சென்னை தாம்பரம் முனையத்தில் உள்கட்டமைப்பு மேம்பாட்டை விரைவுபடுத்துவது மிகவும் முக்கியமானது என்பதால், போதுமான நிதி வழங்க வேண்டும். இந்த திட்டத்தை செயல்படுத்த ரயில்வே நிதி ஒதுக்கியுள்ளதா? திட்டத்தை விரைவுபடுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்றும்

### வந்தேபாரத் ரெயில் கட்டணத்தை குறைப்பீர்!

சென்னை கடற்கரை - வேளச்சேரி MTRS வழித்தடத்தை பரங்கிமலையுடன் இணைக்கும் பணிகளை விரைவுபடுத்தி, செயல்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்றும், வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களின் டிக்கெட் கட்டணத்தை குறைக்க வேண்டும் எனவும்,

ரயில் வாரியாக ஈட்டப்படும் வருமானத்தைப் பற்றிய துல்லியமான தகவலை



IRCTCயிடமிருந்து பெறவும் ஒருங்கிணைந்த முறையை உருவாக்க வேண்டும் என வும்,

சென்னை கோட்டத்தில் உள்ள ரயில் நிலையங்களின் நவீனமயமாக்கல் பணிகளில் உள்ள முன்னேற்றத்தின் தற்போதைய நிலையையும், ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒதுக்கப்பட்ட, வழங்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதி விவரங்களையும் வழங்க வேண்டும் எனவும்,

சென்னை பெருநகரில் புறநகர் ரயில்கள் மற்றும் மெட்ரோ ரயில்களுடன் பறக்கும் ரயில்களை ஒருங்கிணைப்பதை விரைவுபடுத்த வேண்டும் எனவும் மற்றும் MRTSஐ CMRLக்கு ஒப்படைத்து, இரண்டையும் இணைப்பதற்கு கொள்கை ரீதியான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதா? எனவும்,

### ஊழியர்களின் நலனை பாதுகாக்க வேண்டும்!

நாளொன்றுக்கு 5 லட்சம் பயணிகளை கையாளக் கூடிய திறன் இருந்தாலும், ஒவ்வொரு ஆண்டும் ரூ. 100 கோடி இழப்பை சந்திக்கும் MRTSஐ சென்னை மெட்ரோ நிறுவனத்துடன் இணைப்பதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அதை விரைவுபடுத்த எடுத்த நடவடிக்கைகள் என்ன? அவ்வாறு இணைக்கும்போது ஊழியர்களின் நலனைப் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்பது குறித்தும்

மும்பை புறநகர் ரயில்களை போல தெற்கு ரயில்வேயின் புறநகர் பிரிவுகளிலும் பயணிகளின் வசதிக்காக ஏ.சி. ரயில்களை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா? சென்னை ICF தொழிற்சாலையில் ஆண்டுதோறும் தயாரிக்கப்படும் மொத்த ஏசி பெட்டிகளின் எண்ணிக்கை என்ன? சென்னையின் நான்கு புறநகர் வழித்தடங்களிலும் எவ்வளவு ஏசி பெட்டிகள் பயன்படுத்தப்பட உள்ளது? என வும்,

### வசதிகளை மேம்படுத்துவீர்!

வேளச்சேரி முதல் திருமயிலை வரையிலான அனைத்து பறக்கும் ரயில் நிலையங்களிலும் பெண்கள், முதியவர்கள், மாணவர்கள் உள்ளிட்ட ரயில் பயணிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும்,

சென்னையிலிருந்து காஞ்சிபுரம், விழுப்புரம், அச்சரப்பாக்கம் ரயில் நிலையங்களுக்கு ஷட்டில் (shuttle) ரயில்களை தொடங்க வேண்டும் என வும்?

பயணிகள் பலனடைவதோடு, வருவாயும் ஈட்டக் கூடிய வகையில், சென்னையிலிருந்து திருவாரூர், திருத்துறைப்பூண்டி, காரைக்குடி வழியாக ராமேஸ்வரத்திற்கு தினசரி விரைவு ரயில் சேவையை அறிமுகப்படுத்த வேண்டும் எனவும்,

சென்னை எழும்பூர் மற்றும் தஞ்சாவூர் இடையே கும்பகோணம், மயிலாடுதுறை வழியாக வந்தே பாரத் ரயிலை அறிமுகப்படுத்த வேண்டும் எனவும்,

ஹைதராபாத் தாம்பரம் இடையேயான சார்மினார் எக்ஸ்பிரஸ் ரயிலை சிதம்பரம், கும்பகோணம், தஞ்சாவூர் வழியாக நாகர்கோவில் வரை நீட்டிக்க வேண்டும் எனவும்,

அதிகரித்து வரும் ரயில் பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், தென் தமிழகத்திற்கு செல்லும் அனைத்து ரயில்களிலும் பொதுப் பெட்டி, இரண்டாம் வகுப்பு மற்றும் மூன்றாம் வகுப்பு படுக்கை வசதி கொண்ட ரயில் பெட்டிகள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை இரட்டிப்பாக்க வேண்டும் எனவும்,

சரக்கு ரயில்களை எளிதாக கையாளும் வகையில், சென்னையில் ஓர் ஒருங்கிணைந்த சரக்கு முனையத்தை நிறுவ வேண்டும் என்றும்,

### கேட்டரிங் சேவையில் தமிழர்களை நியமிப்பீர்!

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ரயில் நிலையங்களிலும், தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து ரயில்களின் கேட்டரிங் சேவையிலும் தமிழ் மொழி தெரிந்தவர்களை நியமிக்க வேண்டும் எனவும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வந்தே பாரத் மற்றும் சதாப்தி எக்ஸ்பிரஸ் ரயில்களில் தென்னிந்திய உணவுகளை வழங்க வேண்டும் என தமிழ்நாடு தழுவிய பல்வேறு கோரிக்கைகளை தி.மு.க. எம்.பி. கிரிராஜன் தென்னக ரயில்வே பொது மேளாளர் ஆர். என். சிங் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வலியுறுத்தி பேசினார்.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக பொருளாளர் கழக நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் டி. ஆர். பாலு, கழக நாடாளுமன்ற மக்களவை துணைத் தலைவர் தயாநிதி மாறன், தென்னக ரயில்வே சென்னை கோட்ட தலைவர் கதிர் ஆனந்த், க.செல்வம், கனிமொழி என்.வி. என்.சோமு மற்றும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மாதவரம் தெற்கு பகுதி புழல் 24வது வட்ட தி.மு.க. சார்பில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நீர் மோர் பந்தல் புழல் அம்பேத்கர் சிலை அருகில் மாதவரம் தெற்கு பகுதி தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.வி.ஆர். அருண் ஏற்பாட்டில் நடைபெற்றது. வட்டச் செயலாளர் கே. பி.சுந்தரேசன் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன் குமார், மாவட்ட துணை துணை அமைப்பாளர்கள் எஸ். டி.சீனிவாசன் , ஜி.கே. இனியன் பகுதி அமைப்பாளர் வினோத் முன்னிலை வகித்தனர். சென்னை வட வடகிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். சுதர்சனம், எம்.எல்.ஏ. கலந்துகொண்டு நீர் மோர், பந்தலை திறந்து வைத்து ஆயிரம் பேருக்கு மோர், தர்பூசணி, வெள்ளரிக்காய் இளநீர், கிர்ணி பழம் உள்ளிட்ட பல்வேறு பழங்களை பொதுமக்களுக்கு வழங்கினார். விழாவில் மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் மாதவரம் ஜி.துக்காராம் மற்றும் பகுதி, வட்ட பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.